# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 21 திங்கட்கிழமை 06.05.2024 கதிர் 249







## வடமராட்சி கிழக்கில் அதிகாலை அதிரடி நடவடிக்கை

# வவுனியா பொலிஸாரினால் 30 கிலோ கேரள கஞ்சா மீட்பு

### இருவர் வசமாகச் சிக்கினர்



வவுனியா பொலிஸாரால் யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு பிர தேசத்தில் முன்னெடுக்கப்பட்ட திடீர் விசேட நடவடிக்கையின்போது 30 கிலோ 500 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதுடன், இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் போதைப்பொருள் கைமாறுவதாக வவுனியா விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் வவுனியா பொலிஸ் நிலைய போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு பொலிஸ் பரிசோதகர் ரிஸ்வி தலைமையிலான பொலிஸ் பிரிவினர் இன்று அதிகாலை திடீர் சோதனை நடவடிக் கையை மருதங்கேணி பகுதியில் முன்னெடுத்தனர்.

2▶

### புளியங்குளம் பொலிஸ் நிலையத்தில் வைத்து

## குடும்பஸ்தரைத் தாக்கிய நபரைக் கைது செய்யுமாறு கோரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் முன் போராட்டம்!





வவுனியா, புளியங்குளம் பொலிஸ் நிலையத்தில் பொலிஸார் முன்னிலையில் குடும்பஸ்தரைத் தாக்கிய நபரைக் கைது செய்யுமாறு கோரி வவுனியா - கண்டி வீதியில் அமைந்துள்ள சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் முன்பாக இன்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தாக்குதலுக்குள்ளான நபர் உட்பட 40 இற்கும் மேற்பட்டோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர், "பொலிசார் பக்கசார்பாகச் செயற்படாது குழாய் கிணறு ராசனை கைது செய், பொலிஸ் நிலையத்துக்குள் வைத்து தாக்கியவருக்குப் பாதுகாப்பு கொடுக்காதே, பொது மக்கள் மீது தாக்குதல் நடத்திய பொலிஸார் மீதும் நடவடிக்கை வேண்டும்" எனப் பல்வேறு கோஷங்களை எழுப்பினர்.

இதனையடுத்து, வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சார்பாக 10 பேரை அழைத்துப் பேசினார். இதன்போது பொலிஸ் நிலையத்தில் வைத்து தாக்கிய வெளிநாட்டில் இருந்து வருகை தந்த நபரை 3 தினங்களுக்குள் கைது செய்து உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததுடன், குறித்த சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட பொலிஸார் மீதும் விசாரணை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்திருந்தார். இதனையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து சென்றனர்.

இதேவேளை, கடந்த மாதம் 15 ஆம் திகதி வவுனியா, சின்னப் பூவரசன்குளம் பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையைப் புளியங்குளம் பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரி உட்பட ஏனைய பொலிஸாரும் பிடித்து வைத்திருக்க வெளிநாட்டில் இருந்து வருகை தந்திருந்த நபர் ஒருவர் பொலிஸ் நிலையத்துக்குள் வைத்து தாக்கினார் என்று பாதிக்கப்பட்ட குடும்பஸ்தர் தெரிவித்திருந்தார். அவர் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## 2022 சா/தர பரீட்சை மீள் திருத்த பெறுபேறுகள் வெளியாகின!!

### 1343 பேரின் முடிவுகள் மாறியுள்ளன

2022 கல்விப் பொதுச் சான்றிதழ் சாதாரண தரப் பரீட்சையின் மீள் திருத்த பெறுபேறுகளின் அடிப்படையில் 1343 விண்ணப்பதாரர்களின் முடிவுகள் மாற்றப்பட்டுள்ளன. இது நூற்றில் ஒரு வீதமாகும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

மீள் பரிசீலனைக்கு 118,485 பரீட்சார்த்திகள் விண்ணப்பித்த நிலையில், அதன் முடிவுகள் 04 ஆம் திகதி நள்ளிரவு வெளியிடப்பட்டது. பரீட்சை பெறுபேறுகளை பரீட்சை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.doenets.lk அல்லது www.resulte.exams.gov.lk ஊடாக பெற்றுக்கொள்ள முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ரெம-18)

## உள்ளூராட்சி அபிவிருத்தி சமூக ஆலோசனைக் குழு என்ற பெயரில் தமக்கு நெருக்கமானவர்களை பதவியில் அமர்த்த அரசு எத்தனிப்பு!

### தேர்தல்களை நோக்கிய ஜனநாயக மீறல் என்கிறார் டலஸ் எம். பி.



உள்ளூராட்சி அபிவிருத்திக்கான சமூக ஆலோசனைக் குழு என்ற பெயரில் தமக்கு அரசியல் ரீதியில் நெருக்கமானவர்களை நியமிப்பதில் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை அப்பட்டமான ஜனநாயக மீறல் என நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழஹப்பெரும தெரிவித்தார்.

கொஸ்வத்தை 'நிதஹாச' பிரதான காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில், "ஏப்ரல் 29 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் மூலம் இந்த சமூக ஆலோசனைக் குழுக்களின் நியமனம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி நிறுவனங்களில் பதவி வகித்த அரச பிரதிநிதிகளை பலப்படுத்துவதற்காகவே இந்த முயற்சியை அரசாங்கம் எடுத்துள்ளது. தேர்தல் சட்டங்கள் அமுலில் இருக்கும் இவ்வேளையில், உள்ளூராட்சி தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்தவர்களுக்கு இது போன்ற முடிவெடுக்கும் அதிகாரத்தை வழங்குவது ஜனநாயகத்தைக் கொன்றொழிக்கும் செயலாகும். உலக ஜனநாயகக் கூட்டமைப்பின் துணைத் தலைவராக

2▶

# கடன் மறுசீரமைப்பு மற்றும் பொருளாதாரத்தில் இலங்கைக்கு சீனா தொடர்ந்தும் ஆதரவளிக்கும்

## பிரதமர் தினேஷிடம் சீனத் தூதுவர் உறுதி

கடன்மறுசீரமைப்புமற்றும்பொருளாதார சவால்களை எதிர்கொள்வதற்கு சீனா தொடர்ச்சியான ஆதரவை வழங்கும் என இலங்கைக்கான சீனத் தூதுவர் ச்சீ ஷென்ஹோங், பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் உறுதியளித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடிகளை சமாளிக்கும் இலங்கையின் உறுதி குறித்து தாம் மகிழ்ச்சியடைவதாகவும் சீனத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கைக்கான சீன தூதுவர் மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோருக்கிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போதே சீனத் தூதுவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நடப்பு வருடம் மார்ச் மதம் பிரதமரின் சீனப்பயணத்தின்போது இருநாடுகளுக்கும் இடையே கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்த விடயங்களைங் விரைவாக செயல்படுத்துவது குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது.

(ரெம-19)

## சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில்

# மேல்நிலை அதிகாரியை தாக்கிய ஆண் தாதி கைது

*சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் மேல்நிலை அதிகாரி ஒருவரை வைத்தியசாலையில் கடமை நேரத்தில் வைத்து தாக்கிய குற்றச்சாட்டில் அதே வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றும் ஆண் தாதி ஒருவர் தனக்குக் கிடைக்க வேண்டிய சம்பளம் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவு ஆகியன கிடைக்கவில்லை எனச் சம்பந்தப்பட்ட மேல்நிலை அதிகாரியை வினவியதுடன் திடீரென அவர் மீது தாக்குதலும் நடத்தியுள்ளார்.*

*இதில் பாதிக்கப்பட்ட மேல்நிலை அதிகாரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றிருந்த நிலையில் பொலிஸார் இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து சம்பந்தப்பட்ட தாதியைக் கைது செய்துள்ளனர்.*

*(அ)*

# நிலவுகின்ற உயர் வெப்பநிலையின் காரணமாக உடலை குளிர்விக்கும் பானங்களை அருந்துமாறு ஆலோசனை

நிலவுகின்ற உயர் வெப்பநிலையின் காரணமாக உடலை குளிர்விக்கும் தர்பூசணி, தோடம் பழம், இளநீர், பார்லி, சவ்வரிசி ஆகியனவற்றை பானங்களாக அருந்துவது மிகவும் நல்லது என ஆயுர்வேத வைத்திய அதிகாரி சஞ்சீவனி சில்வா தெரிவித்துள்ளார்.

பெரியவர்கள் ஒரு நாளைக்கு 3 லீற்றர் நீர் அருந்துவதும், சிறு பிள்ளைகள் 2 லீற்றர் நீர் அருந்துவதும் சிறந்தது என்பதுடன், அதிக வெப்பநிலையைக் கருத்தில் கொண்டு புடலங்காய்,பீர்க்கங்காய், வெள்ளரிக்காய், சுரைக்காய் போன்றவற்றைச் உண்பது நல்லதுடன் குளிர்ச்சியான நீரில் குளிப்பது நல்லது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதிக வெப்பம் காரணமாக தொடர்ந்து வியர்வை வெளியேறுவதால், தர்பூசணி, தோடம்பழம், சவ்வரிசி, பார்லி போன்றவற்றை பானமாக அருந்துவதால் அவை உடலை குளிர்ச்சியாக வைத்திருக்க உதவுகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ரெம-20)

# சரத் பொன்சேகாவின் கட்சி உறுப்புரிமை மேன்முறையீட்டு மன்று திகதி நிர்ணயம்



நாடாளுமன்ற உறுப்பினரான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் கட்சி உறுப்புரிமை மற்றும் அவர் வகிக்கும் பதவிகளில் இருந்து அவரை நீக்குவதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்த தடை உத்தரவை இடைநிறுத்துமாறு கோரி ஐக்கிய மக்கள் சக்தி தாக்கல் செய்த சீராய்வு மனுவை பரிசீலிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் திகதி நிர்ணயித்துள்ளது.

அதன்படி இந்த மனு இன்று அழைக்கப்பட்டபோது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி டி. என். சமரகோன் இம்மாதம் 21ஆம் திகதி இந்த மனுவை விசாரிக்க உத்தரவிட்டார்.

இதேவேளை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார உள்ளிட்டோரால் இந்த மீளாய்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)

### வவுனியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்போது, போதைப்பொருளைத் தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் வடமராட்சி கிழக்கு பிரதேசத்தைச் சேர்ந்த 36, 35 ஆகிய வயதுடைய இரு நபர்கள் கைது செய்யப்பட்டதுடன், அவர்களிடமிருந்து 30 கிலோ 500 கிராம் கேரள கஞ்சாவும் மீட்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட நபர்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா ஆகியவை மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸ் நிலைய போதைப்பொருள் ஒழிப்புப் பொலிஸ் பிரிவினருடன் இணைந்து மருதங்கேணி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

அண்மைக்காலமாக வவுனியா விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் வவுனியா பொலிஸ் நிலைய போதைப்பொருள் ஒழிப்புப் பொலிஸ் பிரிவினருடன் இணைந்து பல திடீர் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

### உள்ளூராட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்ஹ இவ்வாறு நடந்து கொண்டுள்ளமை வெட்கப்பட வேண்டிய மற்றும் வருத்தப்பட வேண்டிய விடயமாகும்.

தற்போதுள்ள 09 ஆளுநர்களில் 07 பேர் அரசாங்கத்தை சேர்ந்தவர்கள் ஆவர். ஜனாதிபதியின் நேரடி பிரதிநிதிகளாக இவர்களே மேற்படி சமூக ஆலோசனை குழுவை தேர்வு செய்வர். அடுத்த ஆபத்தான விடயம், ஜூலை 17 முதல் ஜனாதிபதி தேர்தல் சட்டம் அமுலுக்கு வருகின்றது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே ஜனாதிபதி விக்கிரமசிங்ஹவும், அரசாங்கமும் தேர்தல் களத்தில் எதிர்தரப்பு அரசியல் கட்சிகளுக்கான சம வாய்ப்பை இல்லாதொழிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக கருத வேண்டியுள்ளது" எனவும் தெரிவித்துள்ளார்.

(ரெம-17)

# இலங்கை சமுர்த்தி முகாமையாளர் சங்க உப தலைவராக அன்வர் தெரிவு

*(எம் எப்.நவாஸ்)*

*அகில இலங்கை சமுர்த்தி முகாமையாளர்கள் சங்கத்தின் உப தலைவராக நிந்தவூர் பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப்பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சீ. அன்வர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.*

*அகில இலங்கை சமுர்த்தி முகாமையாளர்கள் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் பத்தரமுல்ல சுகுருபாய 19 ஆவது மாடி மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.*

*இதன்போது இடம்பெற்ற அகில இலங்கை சமுர்த்தி முகாமையாளர்கள் சங்கத்தின் நிர்வாகத் தெரிவின் போதே உப தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.*

*சமுர்த்தி தலைமைப்பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சீ.அன்வர் அம்பாறை மாவட்ட தமிழ் பேசும் சமுர்த்தி முகாமையாளர்கள் சங்கத்தின் தலைவராக மிகத் திறமையாக செயற்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.*




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# அறநெறி ஆக்கத்திறன் போட்டிகளில் திறமைகாட்டிய 40 மாணவர் கௌரவிப்பு





(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய அறநெறி ஆக்கற்திறன் போட்டிகளில் திறமையை வெளிப்படுத்திய 40 அறநெறி மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வு திருக்கோவில் பாலக்குடா பாலவிநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலையில் நேற்று இடம்பெற்றது.

தேசிய ரீதியில் தெரிவான குருகுல மாணவன் ஜெயராஜா யுவராஜ் உள்ளிட்ட நாற்பது மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

அம்பாறை மாவட்ட திருநாவுக்கரசு நாயனார் குருகுலம் நடாத்தி வரும் 11 அறநெறிப் பாடசாலைகள் இணைந்து நாவுக்கரசர் பெருமானுடைய குரு பூசை தினத்தை சிறப்பாக நடாத்தியபோது இக்கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்றது.

குருகுல ஸ்தாபகர் பணிப்பாளர் கண.இராசரெட்ணம் தலைமையில் குருபூஜையும் கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்றன. பிரதம அதிதியாக திருக்கோவில் வலயக்கல்விப் பணிப்பாளர் த.உதயகுமார் கலந்து சிறப்பித்தார். ஏனைய அதிதிகளும் கலந்து கொண்டனர்.

போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## அறிவு ஒளி மையத்தில் மாணவருக்கு தலைமைத்துவப் பயிற்சிப் பட்டறை

(ஹஸ்பர் ஏ.எச்)

பத்தாம் குறிச்சி அறிவு ஒளி மையத்தில் பயன்பெறும் மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிப் பட்டறை நேற்று (5) திருகோணமலை நகரசபை வளாகத்தில் உள்ள நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் சண்முகம் குகதாசன் கலந்துகொண்டு ஆரம்பித்து வைக்க, இவ்வமர்வை வளவாளர் கணேஷ் சிறப்பான முறையில் நடத்தினார்.

இந்த அமர்வு பத்தாம் குறிச்சி அறிவு ஒளி மையத்தின் பணிப்பாளர் அஜித் குமார் உதயகுமார், ஆசிரியை செல்வி.டிலக்ஷிகா புகழ் வேந்தன் மற்றும் அறநெறி ஆசிரியை ஜெயவதணி இளங்கோவன் ஆகியோரால் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.






## காத்தான்குடியில் ஊடகச் செயலமர்வு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

காத்தான்குடியைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் சுயாதீன ஊடகவியலாளர் போரத்தின் ஏற்பாட்டில் "பகிர்வதற்கு முன் சிந்தியுங்கள்" எனும் தொனிப்பொருளிலான ஊடகச் செயலமர்வு, செய்குல் பலாஹ் கல்வி மையத்தின் கேட்போர் கூடத்தில் போரத்தின் தலைவர் எம்.எச்.எம்.அன்வர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த ஊடகச் செயலமர்வில் உயர்தர மாணவர்கள், ஊடகத்துறையில் ஆர்வம் கொண்டோர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் சிரேஷ்ட ஊடகவியலாளரும் விடிவெள்ளி பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான எம்.பீ.எம். பைறூஸ் வளவாளராக கலந்து கொண்டார்.

இதன் போது போலிச் செய்திகளை எவ்வாறு இனங்காண்பது, சமூகவலைத்தளப் பாவனையின் போது எவ்வாறான நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும், போலிச் செய்திகளால் இடம்பெற்ற மரணங்கள், சமூக வலைத்தளப் போலிச் செய்தியை உறுதிப்படுத்தாமல் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகைச் செய்திகள் என பல்வேறு விடயதான தலைப்புக்களில் அவர் விரிவுரையாற்றினார்.

இந்நிகழ்வில் ஆய்வுக்கும் மேம்பாட்டுக்குமான இஸ்லாமிய மகளிர் ஒன்றியத் தலைவி அனீஸா பிர்தௌஸ் மற்றும் மூத்த ஊடகவியலாளர்கள், இளம் ஊடகவியலாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். செயலமர்வில் பங்குபற்றியவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.



# மகளிர் ரி-20 உலகக் கிண்ணத் தொடருக்கு இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி தகுதி!

2024 ஆம் ஆண்டிற்கான மகளிர் ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கு இலங்கை மகளிர் அணி தகுதி பெற்றுள்ளது.

மகளிர் ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கான தகுதிகாண் போட்டிகளில், அரையிறுதிப் போட்டியில் ஐக்கிய அரபு இராச்சிய அணியை வீழ்த்தியதன் மூலம் இலங்கை மகளிர் அணி தகுதி பெற்றது.

அபுதாபியில் நேற்று நடைபெற்ற தகுதிகாண் சுற்றில், இலங்கை மற்றும் ஐக்கிய அரபு இராச்சிய அணிகள் ஒன்றையொன்று எதிர்கொண்டிருந்தன.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஐக்கிய அரபு இராச்சிய அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட இலங்கை அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இலங்கை அணி சார்பில் விஷ்மி குணரத்ன 45 ஓட்டங்களையும், நிலக்ஷிகா சில்வா 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

150 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஐக்கிய அரபு இராச்சிய அணி, 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்று தோல்வியடைந்தது.

ஐக்கிய அரபு இராச்சிய அணி சார்பில் அணித் தலைவி ஈஷா ஓசா 66 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

இலங்கை அணியின் பந்துவீச்சில் அணித் தலைவி சாமரி அத்தபத்து 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றனார்.

இந்த போட்டியில் இலங்கை மகளிர் அணி 15 ஓட்டங்களினால் வெற்றியீட்டியதன் மூலம், 2024ஆம் ஆண்டுக்கான மகளிர் ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்குத் தகுதி பெற்றுக்கொண்டது.

போட்டியின் ஆட்ட நாயகியாக ஐக்கிய அரபு இராச்சிய அணியின் அணித் தலைவி ஈஷா ஓசா தெரிவு செய்யப்பட்டார்.

மகளிர் ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான தகுதிகாண் சுற்றின் இறுதிப் போட்டி நாளை நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியில் இலங்கை மகளிர் அணி, தகுதிகாண் சுற்றின் மற்றைய அரையிறுதி போட்டியில் அயர்லாந்து மகளிர் அணியை வீழ்த்தி வெற்றி பெற்ற ஸ்கொட்லாந்து மகளிர் அணியை எதிர்கொள்ளவுள்ளது.

ஸ்கொட்லாந்து மகளிர் அணியும் 2024 ஆம் ஆண்டிற்கான மகளிர் ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கிளிநொச்சியில் 4026 மாணவர்கள் சா–தரம் தோற்றுகின்றனர்!

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இரண்டு கல்வி வலயங்களில் இன்றைய தினம் கா.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எழுதுவதற்கு மாணவர்கள் ஆர்வத்துடன் வருகை தத்தமையை அவதானிக்க முடிந்தது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 2024 ஆண்டு 33 பரீட்சை நிலையங்கள் 4026 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றுகின்றனர்.

பரீட்சை நிலையங்கள் இணைப்பு செய்யும் வகையில் 10 நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு பரீட்சை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பாடசாலை ரீதியாக 3519 பரீட்சார்த்திகளும், 507 தனிப்பட்ட பரீட்சார்த்திகளுமாக மொத்தம் 4026 மாணவர்கள் இம்முறை நடைபெறும் கா.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். (02)

# சூதாட்ட விடுதிக்கு செல்வது போல் பங்குச் சந்தைக்குள் நுழையாதீர்கள்!

## முதலீட்டாளர்களிடம் கோரிக்கை

சூதாட்ட விடுதிக்கு செல்வது போல் பங்குச் சந்தைக்குள் நுழைய வேண்டாம் என முதலீட்டாளர் சமூகத்திடம் இலங்கையின் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு கேட்டுக் கொண்டுள்ளது.

பங்குச்சந்தை என்பது நிறுவனப்பங்குகளை வாங்கவும் விற்கவும் கூடிய முதலீட்டு வழி எனவும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

பங்குச் சந்தை கணிசமாக உயர்ந்து வருவதாகவும், இதுபோன்ற சந்தர்ப்பங்களில், சில முதலீட்டாளர்கள் பங்குச் சந்தையை சூதாட்டமாகப் பயன்படுத்த ஆசைப்படுவதாகவும் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ரெம-14)

# ஒன்லைன் மூலம் போதைப்பொருள் டெலிவரியில் ஈடுபட்டவர்கள் கைது

ஒன்லைன் முறையின் மூலம்பணம் செலுத்தப்பட்டு போதைப்பொருளை வீட்டுக்கே டெலிவரி செய்யும் விதமாக போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் இருவர் குறித்து சீதுவ பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்றரகசியதகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போது போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட 9பேர்கைதுசெய்யபட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களுள் இரண்டு முக்கிய சந்தேக நபர்கள் ஒன்லைனில்போதைப்பொருள்கடத்தும் இருவர் ஆகும். அந்த இருவரையும் விசாரணை செய்த போது, அவர்களது வலையமைப்பில் உள்ள மேலும் 7 பேரை சோதனையிட்டதுடன், அவர்களிடமிருந்து 10 கிராம் 750 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இவர்கள் அனைவரும் போதை பழக்கத்திற்கு அடிமையானவர்கள் எனவும் சீதுவை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ரெம-16)

# அரச போக்குவரத்துச் சேவையாவது பஸ் கட்டணத்தைக் குறைக்கவேண்டும்!

## பயணிகள் உரிமை பாதுகாப்பு அமைப்பு கோரிக்கை



தனியார் பஸ் உரிமையாளர்களால் பஸ் கட்டணத்தை குறைக்க முடியாவிட்டால்அரசாங்கத்தின் கீழ் இயங்கும் இலங்கை போக்குவரத்து சபை பஸ் கட்டணமாவது உடனடியாக குறைக்கப்பட வேண்டும் என பயணிகள் உரிமை பாதுகாப்பு அமைப்பின் போசகர் சாகர தனஞ்சய தெரிவித்தார்.

எரிபொருளின் விலை 30 ஷருபாவால்குறைக்கப்பட்டுள்ள இவ்வேளையில் பஸ் கட்டணத்தை குறைக்காவிட டால் எதிர்காலத்தில் பயணிகளுடன் வீதியில் இறங்கி போக்குவரத்து அதிகாரிகளுக்கு எதிராக கடும் நட வடிக்கையில் இறங்குவோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டால் உடனடியாக பஸ் கட்டணத்தை அதிகரிக்க பஸ் சங்கங்கள் முயற்சிப்பதாக தெரிவித்த அவர், எரிபொருள் விலை குறைக்கப்பட்ட போது மாத்திரம் பஸ் கட்டணம் குறைக்கப்படவில்லை என வருத்தம் தெரிவித்தார்.

மேலும் தெரிவித்த அவர் டீசல் விலை குறைக்கப்பட்டுள்ள இவ்வேளையில் பஸ் கட்டணத்தை குறைக்க முடியாது என பஸ் சங்கங்களும்தேசியபோக்குவரத்து ஆணைக்குழுவும் கூக்குரலிடுகின்றன, இது அப்பாவி பயணிகளுக்கு விழுந்த பலத்த அடியாகும்" என்றார்.

(ரெம-15)

# டெங்கு நுளம்புக் குடம்பிகள் பெருகக்கூடிய கொள்கலன் சேகரிப்பு நிகழ்வு காரைதீவில்





(அஸ்ஹர் இப்றாஹிம்)

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் தஸ்ஸீமா பசீரின் பணிப்புரையின் பேரில் அவரது நேரடி கண்காணிப்பில் கொள்கலன் சேகரிப்பு நிகழ்வு மாவாடிப்பள்ளி பிரதேசத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், நுளம்பு களத் தடுப்புப் பிரிவினர், சுற்றாடல் கழக மாணவர்கள், பிரதேச சபை ஊழியர்கள் இணைந்து செயற்பட்டனர்.

நுளம்பு பெருகும் இடங்களைப் பரிசோதனை செய்து, நுளம்பு பெருகும் பொருட்கள் பிரதேச சபை ஊழியர்களினால் அகற்றப்பட்டன. இதே போன்று ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளதாக காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

## காரைதீவு வைத்தியசாலையில் 4 மில்லியன் செலவில் தாழ்வாரம்

(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு வைத்தியசாலையில் சுமார் 4 மில்லியன் ஷரூபாய் பெறுமதியான புதிய தாழ்வாரம் (உழசனைழழச) ஒன்றிற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

காரைதீவு பிரதேச வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி டொக்டர் நடராசா அருந்திரன் தலைமையில் அடிக்கல் நாட்டு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பிரதம அதிதியாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஸஹீலா இஸ்ஸ தீன் கலந்து சிறப்பித்தார் .

பிரதான வீதிக்கு அருகாமையில் உள்ள வைத்தியசாலைக் காணியில் கட்டப்பட்ட புதிய கட்டிடத்தையும் பழைய கட்டிடத்தொகுதியையும் இணைக்கும்வகையில்இது அமைக்கப்படவுள்ளது.

இது நிர்மாணிக்கப்பட்ட பின்னர் புதிய கட்டிடம் வெளிநோயாளர் பிரிவாக பயன்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வடிக்கல் நாட்டு நிகழ்வில் வைத்தியர்கள், வைத்தியசாலைப் பணியாளர்கள், வைத்தியசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.





## தகவல் அறியும் உரிமைச் சட்டம் திருகோணமலையில் செயலமர்வு

(ஹஸ்பர் ஏ.எச்)

தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பில்திருகோணமலை மாவட்ட பிரதேச ஊடகவியலாளர்கள், ஊடக ஆர்வலர்கள், சிவில் செயல்பாட்டாளர்களுக்கான செயலமர்வொன்று திருகோணமலையில் உள்ளதனியார்விடுதிஒன்றில்நேற்றுமுன்தினம் (4) இடம் பெற்றது.

குறித்த செயலமர்வினை விடியல் இணையத்தளமும் மட்டக்களப்பிலுள்ள அமெரிக்கன் ஐ ஹப் நிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

இதில் தகவல் உரிமைச் சட்டத்தின் பிரகாரம் அரச திணைக்களங்கள், அதிகார சபைகள் இடமிருந்து கோரிக்கை அனுப்பி எவ்வாறு தகவல்களைப் பெறலாம் மற்றும் தகவல் ஆணைக்குழு உள்ளிட்ட விண்ணப்பங்கள் தொடர்பிலும் தெளிவூட்டப்பட்டன.

குறித்த நிகழ்வுக்கு வளவாளராக விடியல் இணையத்தளத்தின் பிரதம ஆசிரியரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான றிப்தி அலி கலந்து கொண்டார்.

இதில் பிரதேச ஊடகர்கள், சிவில் செயல்பாட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# அரச அதிகாரி என்ற வரையறையைக் கடந்து மக்களின் தேவை அறிந்து செயலாற்றியவர் அமரர் கேதீஸ்வரன்!

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் அனுதாபம்!

மன்னார் மாவட்ட மக்களின் நலனில் இனப்பாகுப்பாடுகளின்றி தமது காலத்தில் செயல்பட்ட ஒரு நல்ல மனிதரை இழந்துள்ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் கவலை தெரிவித்துள்ளார்.



முன்னாள் முசலி பிரேதேச செயலாளர் செ.கேதீஸ்வரனின் மறைவு தொடர்பில், அவர் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் கூறியிருப்பதாவது,



இறுதி யுத்தத்தின் போது தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து, மெனிக்பார்ம் நலன்புரி முகாமுக்கு வந்தபோதும், அதன் பிற்பாடான மீள்குடியேற்றத்தின் போதும், இடப்பெயர்வுக்குள்ளாகி புத்தளத்தில் வாழ்ந்து வந்த முஸ்லிம் மக்களின் முசலி மீள்குடியேற்றத்திலும் இரவு, பகலாக சோர்வின்றி பணியாற்றியமை, அவரது மனித நேசத்தையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் உயர் குணத்தையும் வெளிக்காட்டியது.

அது மட்டுமல்லாமல், மீள்குடியேறும் மக்களின் காணிப் பிரச்சினை, வீட்டுப் பிரச்சினை என்பன தொடர்பில், பல தரப்புக்கள் பிழையான பார்வையினைக் கொண்டு, எதிர்ப்புக்களை வெளியிட்டு வந்த போதும் சரியான நிலைப்பாட்டில் நின்று, பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகள், எதிர்பார்ப்புக்கள் என்பவற்றுக்காக முன்னின்று செயலாற்றியவராக அமரர் கேதீஸ்வரன் இருந்துள்ளார்.

இவரது துணிவான செயற்பாடுகளை ஜீரணித்துக்கொள்ள முடியாதவர்களின் அழுத்தம் காரணமாக, வட மாகாண சபைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட அமரர் கேதீஸ்வரன், மன உளைச்சலுடனேயே இருந்தார்.

இடமாற்றம் வழங்கப்பட்ட போதும் மன்னார் மாவட்ட மக்களின் நலன் தொடர்பில், எம்முடன் அடிக்கடி தொலைபேசியில் தொடர்புகொண்டு பல விடயங்களைப் பகிர்ந்துகொள்ளும் சிந்தனை கொண்டவராக இருந்ததை, இந்த தருணத்தில் நினைவு கூருவது எமது பொறுப்பாகும்.

அவரது காலத்தில், மீள்குடியேற்ற விடயத்தில் அவர் ஆற்றிய பங்களிப்பினை இன்றளவும் மறக்க முடியாததொன்றாகவே நான் பார்க்கின்றேன்.

அவரது இழப்பு ஈடு செய்ய முடியாததாகும். அன்னாரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த கவலையினை தெரிவித்துக்கொள்கின்றேன், என்று குறிப்பிட்டுள்ளார்.

# அட்டாளைச்சேனை சம்புக்களப்பு வீதிக்கு மின்சாரம் வழங்கல்

(எம்.ஏ.றமீஸ்)



அட்டாளைச்சேனை சம்புக்களப்பு வீதிக்கு மின்சாரம் வழங்கும் வேலைத்திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் சம்பிரதாய பூர்வமாக இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச மக்களின் நீண்ட காலத் தேவைக்கான இவ்வேலைத் திட்டத்தின் மூலம் பலதரப்பட்ட பொதுமக்களும் நன்மை பெறவுள்ளனர்.

அட்டாளைச்சேனை பிரதேச சபை செயலாளர் எம்.ஐ.எம்.பாயிஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்விற்கு முன்னாள் அமைச்சரும், அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள சம்புநகர், மீலாத்நகர், ஆலம்குளம், தீகவாபி உள்ளிட்ட சில எல்லைப் புறக் கிராமங்களையும், அம்பாறை நகரினையும் இணைக்கும் பாதையாகவும், விவசாயக் காணகளுக்குச் செல்லும் மக்களின் பிரதான பாதையாகவுமுள்ள இவ்வீதி நீண்ட காலமாக இரவு வேளைகளில் இருளில் மூழ்கிக் காணப்பட்டது.

இவ்வீதியின் ஒரு பகுதிக்கு பிரதேச சபை மூலம், இவ்வாறு மின்சாரம் வழங்கப்பட்டமையால் பெருந்தொகையான பொதுமக்கள் நன்மை பெறவுள்ளனர். இவ்வீதி மின்சார வசதியற்றுக் காணப்பட்ட கடந்த காலங்களில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்பட்டதுடன், இரவு நேர வீதிப் போக்குவரத்தின்போது பல்வேறு விபத்துக்களும் இடம்பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

அட்டாளைச்சேனை பிரதேச மக்களின் நீண்ட காலத் தேவையாக இருந்து வந்த இவ்வீதிக்கான மின் இணைப்பு வேலைத்திட்டத்தினை அங்குரார்ப்பணம் செய்து வைத்த முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாஉல்லா, இப்பகுதியில் அமையப் பெற்றுள்ள கொல்களத்திற்கான நீர் இணைப்பினையும் மக்கள் பாவனைக்காக ஆரம்பித்து வைத்தார்.

அட்டாளைச்சேனை பிரதேச சபை செயலாளர் எம்.ஐ.எம்.பாயிஸின் முயற்சியினாலும், தூர நோக்கு மிக்க எண்ணத்தினாலும் மேற்கொள்ளப்பட்ட இவ்வேலைத் திட்டத்தினை அரசியற் பிரமுகர்கள், திணைக்களத் தலைவர்கள், துறைசார் முக்கியஸ்தர்கள் போன்றோர் மேலும் விஸ்தரித்து பொதுமக்கள் ஆண்டாண்டு காலம் நன்மை பெறும் வகையில் இவ்வேலைத் திட்டத்திற்கு உரமூட்ட வேண்டுமென இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் இவ்வீதி மூலம் பயணிப்போர் பல்வேறான இன்னல்களையும், இடையூறுகளையும் அனுபவித்து வந்தனர். காட்டு யானைகளின் அட்டகாசம், முதலைகள், பாம்புகள் போன்ற நீர்வாழ் உயிரினங்களின் அச்சுறுத்தல்கள், கட்டாக்காலிகளின் இடைஞ்சல்கள், வீதி விபத்துக்கள் என பல்வகை மக்கள் பாதுகாப்பற்ற விடயங்கள் நடந்தேறியுள்ளன.

இதேவேளை, எல்லைப்புறக் கிராமங்களில் வசித்து வரும் மக்கள் இரவு வேளைகளில் வைத்திய தேவைகளுக்காக வைத்தியசாலைகளுக்கு செல்லல், மரண வீடுகளுக்குச் செல்லல் மற்றும் இரவு நேர அவசரத்தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளல் போன்ற தேவைகளை மேற்கொள்வதற்கும் இப்பாதை இருளில் மூழ்கிக் காணப்பட்டமை மக்களுக்கு பெரும் சவாலினைத் தோற்றுவித்தது எனலாம்.

இதன்போது சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா, கிழக்கு மாகாண முதலமைச்சின் முன்னார் செயலாளர் யூ.எல்.ஏ.அஸீஸ், அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.எம்.றியாஸ் உள்ளிட்ட உள்ளூராட்சி மன்றங்களின் உயரதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள், அரசியற் பிரமுகர்கள், துறைசார் முக்கியஸ்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.






# சைவ மகா சபை கண்டன அறிக்கை

பசுக்கள்கடத்தப்பட்டுகொடூரமாக அடைத்துவைக்கப்பட்டு மறைவிடங்களில் சட்ட விரோத இறைச்சி விற்பனைக் குழுக்களால் கொல்லப்படுவதை சைவ மகா சபை வன்மையாக கண்டித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

பசுக்களைத் தெய்வமாக வணங்கும் யாழ்ப்பாணத்தில் மிக கொடூரமாக துன்புறுத்தப்பட்டு சட்ட விரோதமான இடங்களில் இறைச்சியாக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் அவலம் மனதை வருத்துகின்றது.

சனிக்கிழமை (4) மட்டும் குடாநாட்டின் பல பாகங்களிலிருந்து கடத்தி வரப்பட்டுக் கொடூரமாக கொலை செய்யப்படவிருந்த 20 மேற்பட்ட பசுக்கள், காளைகள் உரிய பராமரிப்புக்கள் இன்றி இரத்தம் தோய்ந்த சட்டவிரோத கொல்களப் பகுதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

அண்மைக்காலமாக ஏழைப் பண்ணையாளர்களுடைய பசுக்கள் களவாகக் கடத்தப்படுவது அதிகரித்து வந்த நிலையில், வாயில்லா சீவன்கள் இரத்தவாடை சூழ்ந்த இடத்தில் பட்டினியோடும் தாகத்தோடும் அடைத்து வைத்து, அவற்றின் ஒரு தொகுதி வெட்டபபட்ட நிலையில் ஏனையவை மீட்கப்பட்டுள்ளன. இந்தச் செய்தி மிகுந்த துயரத்தை ஏற்படுத்துகின்றது.

சீவகாருண்ய நடைமுறைகளினை கிஞ்சித்தும் கடைப்பிடிக்காமல் இந்த உயிர்களைத் தொடர்ச்சியாக துன்புறுத்தும் செயற்பாடு இம்மண்ணில் இருந்து ஒழிக்கப்பட வேண்டும்.

ஏழைப் பண்ணையாளர்களினதும் பசுக்களினதும் கண்ணீர்க் கதைகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட வேண்டும்.

அனைத்து துறை சார்ந்த அதிகாரிகளும் இதில் மிகுந்த கரிசனை எடுத்து இதற்குக் காரணமான சட்டவிரோத வலைப்பின்னலை முழுமையாக சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்று கொடுக்க வேண்டும் எனவும், பசுக்கள் வெட்டப்படுவதை முற்று முழுதாகத் தடுக்கவும், சட்டவிரோதக் கொல்களங்களை முழுமையாகக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கவும் சைவ மகா சபை ஆழமாக சம்பந்தப்பட்ட அனைவரிடமும் வலியுறுத்தி நிற்கின்றது, என்று குறிப்பிடப்பட்டுள்ளது.


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக
உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
JRide Driver: Drive & Deliver
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை
பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க
ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver
செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து
உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
Google Play
App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே
புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து
வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்: தொலைபேசி ஊடாகவோ: WhatsApp
மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!